பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 30 | சனிக்கிழமை | 13.07.2024 | அதிர்வு 347

## அமைச்சர் டக்ளஸ் அணி திங்கள் இந்தியா பயணம்


(ந.லோகதயாளன்)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட குழுவினர் நாளைமறு தினம் இந்தியா பயண மாகின்றனர்.

06

## இந்தியத் தூதுவரைச் சந்தித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நேரில் சந்தித்துள்ளது. கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

### கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவில்

# செல்வத்தைத் தலைவராக்க தமிழரசிலும் சிலர் இணக்கம்

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு ரெலோ மற்றும் புளொட் மட்டுமல்லாமல் தமிழரசுக் கட்சியிலும் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் கட்சியின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

06

## மலையகத் தமிழர் தொடர்பில் இந்த அரசுக்குப் படுதோல்வி!

### சம்பளம், வீடு, காணி எதுவும் இல்லை என்று சபையில் மனோ எம்.பி. காட்டம்



மலையகத் தமிழர் தொடர்பில் இந்த அரசு படுதோல்வி அடைந்து விட்டது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. நேற்று சபையில் தெரிவித்தார்.

மலையகத் தியாகிகள் தினம் அறிவிக்கப்பட வேண்டும் எனக் கோரி எம். வேலுகுமார் எம்.பி. முன்மொழிந்து வே.இராதாகிருஷ்ணன் எம்.பி. வழிமொழிந்து சபையில் கொண்டு வந்த பிரேரணை மீது உரையாற்றிய

06




தமக்கு இயைவான இருவரை கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்குப் பதில் அரச அதிபர்களாக வைத்துக்கொண்டு தேர்தலை எதிர்கொள்ளும் யாழ்., கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பில் மண் அள்ளிக் கொட்டி விட்டார் போலும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

நேற்று யாழ். வந்திருந்த பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து சுமந்திரன் எம்.பி. மேற்படி இரண்டு மாவட்டங்களுக்கும் நிரந்தர அரச அதிபர்களை நியமிக்குமாறு கோரியிருந்தார்.

கூட்டம் முடிந்த பின்னர்

06

# ஜனாதிபதித் தேர்தலை உரிய நாளில் நடத்துக! எதிர்க்கட்சிகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை




அரசமைப்பு சதிகளின் ஊடாக ஜனாதிபதித் தேர்தலுக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களை தடுக்குமாறு கோரியும் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ரஞ்சித் மத்தும பண்டார, ரவூப் ஹக்கீம், உதய கம்மன்பில, அத்துரலிய ரத்தன தேரர் உள்ளிட்ட 30 பேரின் கையொப்பங்களுடன் இது தொடர்பான கடிதம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக தோல்வியடையக்கூடும் என்ற அச்சத்திலுள்ள அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை பல்வேறு உத்திகளை கொண்டு ஒத்திவைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

அரசமைப்பில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 05 ஆண்டுகள் எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உயர்நீதிமன்றத்தினால் 03 சந்தர்ப்பங்களில் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சியின கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சாத்தியமான முதல்நாளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறும் தேர்தலை சுதந்திரமான மற்றும் நியாயமான சூழ்நிலையில் நடத்துவதற்கு அதிகபட்ச சட்ட அதிகாரத்தை பயன்படுத்துமாறும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

# பல்கலைக் கல்விசாரா ஊழியர் போராட்டம் நிறைவேற்றுத் தர அதிகாரிகள் கைவிட்டனர்




பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் நிறைவேற்று தர அதிகாரிகள் தமது தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதாக சங்கத்தின் தலைவர் டபிள்யூ.எம்.டபிள்யூ வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி திங்கள் கிழமை முதல் தாங்கள் பணிக்கு சமுகமளிக்கவுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை தற்போது வழங்க முடியாது என நிதியமைச்சு மீண்டும் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் நிதியமைச்சு நேற்று முன்தினம் எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவிடம் தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நிதியமைச்சு விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் தீர்மானம் தொடர்பில் அனைத்து உபவேந்தர்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக பேராசிரியர் சந்தன உடவத்த கூறினார்.

இதனால் உடனடியாக பணிக்கு சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அந்தக் கடிதத்தினூடாக வலியுறுத்தியுள்ளார்.

இதன் பின்னரே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் தலைவரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் தம்மிக்க எஸ்.பிரியந்த தெரிவித்துள்ளார்.

# சீன அரிசியை வழங்க பிரதமர் யாழ் வருவதா?

## தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் பிரமுகர் கேள்வி

இதுவரை யாழ் வராத பிரதமர் சீன அரிசியை வழங்க இங்கு வருகை தந்தமை நகைப்பானது எனவும் இவ்வாறான போலித் திட்டங்களை விடுத்து, இலங்கையின் கடன் வட்டி வீதத்தை குறைக்க சீனா முன்வரவேண்டும் எனவும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்

யாழில் ஊடக சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டர்ர்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட அரிசியை வழங்குவதற்கு எமது பிரதமர் யாழ்பாணத்திற்கு வருகை தந்துள்ளார் என அறிகின்றோம். சாதாரண அரிசியை வழங்குவதற்கு பிரதமர் வருகை தந்திருப்பது மிக நகைச்சுவையான ஒரு விடயம். பிரதேச செயலகங்களில் இந்த அரசியெள வழங்கியிருந்தால் அவர்கள் மிக இலகுவாக அதனை விநியோகித்து இருப்பார்கள்.

ஏற்கனவே இந்த பழுதடைந்த சீன அரிசி எமது நாட்டில் தோல்வியடைந்த நிலையில் வெளிப்படையாக அந்த அரிசி நல்ல தோற்றத்தினை காட்டினாலும் சீனாவினை பொறுத்தவரை எமக்கு சந்தேகம் எழுகிறது . நல்ல பொருளை செய்வதும் போலியான பொருளை செய்வதும் சீன தொழில்நுட்பத்தில் உள்ளது.

இவ்வாறாக நல்ல அரிசி எது, கெட்ட அரிசி எது என நாம் அடையாளம் காண முடியாது. இருந்தும் சீன அரிசியை கொண்டு வருவதை விட எமது மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டிருப்பின் எமது நாட்டில் அரிசியை கொள்வனவு செய்து வழங்கலாம். மாறாக சீன கொலனிகளுக்கு வழங்குவது போல வழங்குவது தவறான விடயம்.

தொடர்ச்சியாக அபிவிருத்தி வேலைகளும் இங்கே நடக்கின்றன. இந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு மாற்றீடாகப் பல விடயங்கள் இருக்கின்றன. அபிவிருத்திகளை கடனுக்கு வழங்கி அதற்கு அறாவட்டிகளைப் பெற்று கொள்ளும் நாடுகளால் எமது நாடு பட்டினியையும் பொருளாதார நெருக்கடியையும் எதிர்கொண்டது.

அந்த நிலையை ஏற்படுத்தாது, இவ்வாறான நாடுகள் அரசியை வழங்காது கடன் வட்டி வீதங்களைக் குறைக்கலாம், பொருளாதாரத்தை வளர்க்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்கு பிரதமர் தினேஷ் நன்றி தெரிவிப்பு








(எஸ்.நிதர்ஷன்)

நாட்டில் ஏற்பட்ட குழப்பமான நிலைமைகளுக்கு இடமளிக்காமல் செயற்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்கு

பிரதமர் தினேஷ் குணவர்த்தன யாழ்ப்பாணத்தில் வைத்து நன்றி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நியமனப் பத்திரங்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு தற்போது படிப்படியாக முன்னோக்கி வருகின்றது. அவ்வாறு நாம் முன்னோக்கி செல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்கியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்கும் இங்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். ஏனெனில் கடந்த சில நாட்களாக எமது நாடு குழப்பமான நிலையை எதிர்கொண்டிருந்தது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. அதற்காக இங்குள்ள அரச ஊழியர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

குறிப்பாக உள்ளூர் அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் தமது கடமைகளை நிறைவேற்றப் பணிக்குச் சமூகமளித்து வழக்கம் போல் தமது செயற்பாடுகளைப் பொதுமக்களுக்கு முன்னெடுத்து வந்தமைக்கு மீளவும் நன்றி கூறுகின்றேன்." – என்றார்.

# புளியங்கூடல் விநாயகரின் 60 பவுண் நகைகள் மாயம்

## நீதி கேட்டு தேங்காய் உடைத்து மக்கள் போராட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயத்தின் சுமார் 60 பவுண்களுக்கு மேற்பட்ட நகைகள் காணாமல் போனமை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்து அப்பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் புளியங்கூடல் சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி பிரதான வழியாக இத்தான் முத்து விநாயகர் ஆலயத்தை சென்றடைந்தது.

ஆலயத்தின் முகவாயிலில் சிதறு தேங்காய் உடைத்து அவர்கள் நேர்த்தி வைத்தனர். பிள்ளையாரின் நகை, பணம் திருடியவனை வீதிக்கு கொண்டுவா என கோஷங்களை எழுப்பியவாறு ஆண் பெண் இருபாலரும் சிதறு தேங்காய் உடைத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் ஆலயத்தின் பணப்பெட்டித் திறப்பு தொலைந்து விட்டதாக தலைவரால் சிலருக்கு தெரிவிக்கப்பட்டது.

எனினும் உடனடியாக பொலிஸாருக்கோ உபயகாரர்களுக்கோ ஆலயத்தின் தலைவரால் தகவல் வழங்கப்படவில்லை.

சில நாள்களின் பின்னர் ஆலய அறங்காவலர் சிலர் ஊடாக அந்தப் பணப் பெட்டியில் இருந்த நகைகள், பணம் என்பன காணாமல் போன தான தகவல்கள் சமூகத்தில் பரவ ஆரம்பித்தது.

ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து குறித்த விடயம் தொடர்பில் தலைவரிடம் வினவிய மக்கள் பூட்டு உடைக்கப்படாமல் எவ்வாறு பெட்டியில் இருந்த நகைகள், பணங்கள் காணாமல் போயின எனக் கேள்வி எழுப்பிய போது அவர் தனக்குத் தெரியாது எனப் பதிலளித்தார்.

ஆலயத்தில் இடம் பெற்ற சம்பவம் ஒரு திருட்டு சம்பவமாக கருதும் நிலையில் அந்த நகைகளையும் பணத்தையும் திருடியவர்கள் ஆலய நிர்வாகத்தில் உள்ளவர்கள்தான் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் திறப்பை காணவில்லை என்றபோதே எல்லோரையும் அழைத்து, பெட்டியை உடைத்து அதில் இருந்த நகைகள், பணத்தை ஆலய நிர்வாகம் எடுத்துப் பாதுகாப்பாக வேறொரு திறப்பை போட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

ஆதலால் இந்தக் களவானது ஆலய நிர்வாகத்திற்குத் தெரிந்து இடம் பெற்றிருக்க கூடும் என்பது எமது சந்தேகமாக இருக்கம் நிலையில் பொலிஸா கால இழுத்தடிப்பைச் செய்யாமல் உரியவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். – என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளாதேவியை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட போது ஆலயத்தில் நகை, பணம் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன எனவும் தெரிவித்தார்.

## அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:

# சந்தேகநபரின் வாக்குமூலத்தினை உத்தரவை மீறி ஊடகங்களுக்கு வழங்கியமை குறித்து விசாரணை



அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் வாக்குமூலத்தை பொலிஸ் மா அதிபரின் உத்தரவை மீறி ஊடகங்களுக்கு வழங்கியமை தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் மாஅதிபருக்கு உத்தர விட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக மேற்படி அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்குள் அந்த அறிக்கையை கையளிக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு கூறியுள்ளது.

இது குறித்து பொலிஸ் விசேட விசாரணை பிரிவினர் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொள்கின்றனர் எனப் பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN
WOLF.CA

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடைவேளை சமயம் இது குறித்து சுமந்திரனுடன் ஆறுதலாகவும் விரிவாகவும் பேசியிருக்கின்றார் அரச அதிபர் நியமனங்களுக்கும் பொறுப்பான பிரதமர் தினேஷ் குணவர்தன.

“தேர்தல் வரப்போகின்றது. யாழ்ப்பாணம் – கிளிநொச்சி இரண்டும் ஒரு தேர்தல் மாவட்டம். இதற்கு ஓர் அரசு அதிபராவது உரிய தரத்தில் இருப்பது அவசியம். அப்போதுதான் அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தல் அதிகாரியாக – தெரிவத்தாட்சி அலுவலராக – அவரைத் தேர்தல் ஆணையம் நியமிக்க முடியும். வழக்கமாக யாழ் மாவட்ட அரச அதிபரையே யாழ்., கிளிநொச்சி ஒன்றுபட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக நியமிப்பது முறைமை. இல்லையேல் அரச அதிபர் அல்லாத வெளி அதிகாரி ஒருவரைத் தேர்தல் ஆணையம் அந்த மாவட்டத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலராக நியமித்து அனுப்பிவிடும். அது, மாவட்டத்தின் தேர்தலைச் சுமுகமாக நடத்தும் விடயத்தில் பல குழப்பங்களை ஏற்படுத்தும்.

“ஆகையால் ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட முன்னர் குறைந்தபட்சம் யாழ் மாவட்டத்திற்காவது நிரந்தர – உரிய தரமுடைய – அதிகாரியை நியமிப்பதன் மூலம் வீண் குழப்பங்கள் ஏற்படாமல் சமாளித்துக் கொள்ளுங்கள்.” – என்று தெளிவாகவும் விளக்கமாகவும் ஆலோசனை கூறியிருக்கின்றார் சுமந்திரன் எனத் தெரிய வருகிறது.

அப்போது அருகில் இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கிட்டார்.

“பதில் அரச அதிபர் ஒருவர் கடமையில் இருந்தால் போதுமானதுதானே...!” – என்று பிரதமருக்கு எடுத்துரைக்க முயன்றார்.

“அந்தப் பதவிக்கான தரநிலையில் ஒருவர் இல்லாத இடத்தில், அந்த மாவட்டத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலருக்கான அதிகாரங்களை தேர்தல் ஆணையம் அவருக்கு வழங்காது.” – என்று சுமந்திரன் கூறினார்.

இதனை அடுத்து, உடனடியாகவே கொழும்பில் உள்ள தமது அமைச்சின் உயர் அதிகாரிகளோடு பிரதமர் தொலைபேசியில் உரையாடி சில வழிகாட்டுதல்கள், அறிவுறுத்தல்களை வழங்கினார் எனத் தெரிகின்றது.

மாவட்ட அரச அதிபர் பதவிக்கான தர நிலையை அண்மையில் எட்டிய எழிலரசி வடக்கு மாகாண நிர்வாகத்தில் ஓர் உயர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார். அவரை மன்னார் அரச அதிபராக நியமிப்பதற்கும், தற்போது மன்னார் அரச அதிபராகப் பணி புரியும் கனகேஸ்வரனை யாழ்ப்பாண அரச அதிபராக நியமிப்பதற்கும் ஆலோசிக்கப்படுவதாக உள்வீட்டு வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

## அமைச்சர் டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தின் அழைப்பின் பெயரிலேயே அமைச்சர் இந்தியா பயணிக்கின்றார்.

15 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து மாலை 6.30 மணிக்குப் புறப்பட்டு இரவு 8.25 மணிக்கு ஹைதராபாத் விமான நிலையத்தைச் சென்றடைகின்றனர். மீண்டும் 19 ஆம் திகதி இரவு 9.20 மணிக்கு நாடு திரும்புகின்றனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நெக்டா நிறுவனத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் நிருபராஜ், நாரா நிறுவனப் பணிப்பாளர் உள்ளிட்டவர்களும் பயணிக்கின்றனர்.

இந்தியாவில் மிதக்கும் சூரிய மின்னுற்பத்தித் திட்டங்கள், இறால் குஞ்சுகள் உற்பத்திப் பண்ணை, மீன் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றை அமைச்சர் பார்வையிடவுள்ளார்.

## மலையகத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறிய தாவது:–

“சம்பளம் 1,700 என்றார்கள் அது இன்னமும் இழுபறி. ரூ.1,000 சம்பளமே முழுமையாக கிடைப்பது இல்லை. சில இடங்களில் அரை பேர் போட்டு ரூ. 500 தரப்படுகின்றது. அப்புறம், இவர்களின் ஏகப்பட்ட முறை கேடுகள், தில்லுமுல்லுகள், மோசடிகள் காரணமாக இந்திய வீட்டுத் திட்டம் தாமதம் ஆகி விட்டது. பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வழங்கிய 10 ஆயிரம் வீட்டு திட்ட உறுதி மொழியை நாம் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றி வைப்போம். அப்புறம், 10 பேர்ச் காணி தருகின்றேன் என்றார்கள். அதற்கு 4 ஆயிரம் மில்லியன் அதாவது, 400 கோடி ஒதுக்கியுள்ளேன் என்றும் சொன்னார்கள். இன்று, காணியையும் காணோம். காணிக்கு ஒதுக்கிய பணத்தையும் காணோம்.

ஆகவே, சம்பளமும் இல்லை. வீடும் இல்லை. காணியும் இல்லை. நீங்கள் எமது மக்களுக்கு ஒன்றும் தரவில்லை. இப்போது தேர்தலை அறிவிக்கத் தேர்தல் ஆணையகத்துக்கு அதிகாரம் வர இன்னும் ஐந்தே நாட்கள் இருக்கும் போது, தோட்ட லயன்களைக் கிராமம் என்று அறிவிக்கப் போகின்றோம் என்று சொல்கின்றீர்கள். இது தேர்தல் குண்டு மாத்திரம் அல்ல, நமது மக்களுக்கு காணி வழங்காமல், தொடர்ந்தும் அவர்களை ஒதுக்கப்பட்ட மக்களாக மலை உச்சிகளில் இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகும், பழங்குடி மக்களாக வைக்க முனையும் சமூக அநீதி.

எனது கொழும்புத் தொகுதி அவிசாவளை புவக்பிட்டிய பென்றித் தோட்ட கருங்காலி பிரிவில் தீ விபத்து நிகழ்ந்தது. நான் உடனடியாக எனது பாமன்கடை வீட்டில் இருந்து கிளம்பி, புவக்பிடியவுக்கு ஒரு மணித்தியாலயத்தில் சென்றேன். ஆனால், புவக்பிட்டியவில் இருந்து கருங்காலி மலை உச்சிக்குச் செல்ல எனக்கு எனது ஜீப் வாகனத்தில் ஒன்றரை மணித்தியாலம் ஆகியது.

பென்றித் தோட்ட கருங்காலி பிரிவுக்கு போய் அங்கே ஒரு வயதான பெண்ணிடம் எப்போது கடைசியாக அவிசாவளை நகருக்குப் போனீர்கள் என்று கேட்டேன். போன பொங்கலுக்குத் துணி வாங்கப் போனேன் என்றார். சிலர் அப்படியும் போனதில்லை. இது ஏன்? இது என்ன? நமது மக்கள் ஒதுக்கப்பட்ட மக்களாக மலை உச்சியில் பழங்குடியினர் போல் வாழ்கின்றார்கள். இருநூறு ஆண்டுகளாக வாழ்கின்றார்கள்.

இது நிறுத்தப்பட வேண்டும். எமது மக்களுக்கு உறுதி அளித்த 10 பேர்ச் வதிவிட காணியை சாலை ஓரங்களில் அல்லது சாலைக்கு அண்மையில் வழங்குங்கள். நமது மக்கள் அப்போது தான் தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே வர முடியும். மலைகளில் இருந்து கீழே வந்து சாலை ஓரங்களில் வீடு கட்டி சிங்கள மக்களுடன் கூடி பழகி வாழட்டும். அப்போதுதான், எமது மக்களின் சட்ட பூர்வ குடி உரிமை முழுமை அடைய முடியும். இது தான் எமது முற்போக்கு கூட்டணியின் முற்போக்கு கொள்கை.

இந்த அரசில் இருக்கும் ஒரு பிற்போக்கு சந்தா சங்கத்துக்கு நமது மக்கள் தேசிய நீரோட்டத்தில் கலப்பது அன்றைய முப்பாட்டன் காலம் முதல் பிடிக்காது. நமது மக்களை எப்போதும் மலை உச்சியிலேயே அடைத்து, சாவி போட்டு மூடி வைத்து விட்டு, பெரும்பான்மை கட்சிகளிடம், நமது மக்களைக் காட்டி, பேரம் பேசி தம்மை வளர்த்து கொள்வதுதான் இவர்கள் பழக்கம்.

நாங்கள் இந்தியப் பிரஜைகள் அல்ல. நாம் மலையக இலங்கை பிரஜைகள். எமது நோக்கம் நாம் இந்நாட்டில் முழுமையான பிரஜைகள் ஆக வேண்டும். இன்று, சம்பளம், காணி, வீடு எதுவும் தராமல் இந்த அரசு, ”மோடி மஸ்தான்” செய்கின்றது. இங்கே ”மோடி” என்றால் இந்தியப் பிரதமர் அல்ல. தமிழில் அப்படி ஒரு மாயாஜாலம் பற்றிய கூற்று இருக்கின்றது. அத்தகைய ஒரு மாயாஜால மோடி மஸ்தான் வேலைதான் இந்தத் தோட்ட லயன்களைக் கிராமம் என்று அறிவிக்கும் லூசு வேலை.” – என்றார்.

## செல்வத்தைத் தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தெரிவு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எங்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதன்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். அதனைத்தான் கட்சிகளிடத்தேயும் நாங்கள் கூறியும் இருக்கின்றோம்.

இதனை ஆரம்பத்திலிருந்தே தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறியிருந்தாலும் இன்று அவர்களுடைய கட்சிக்குள் ஏதோ பிரச்சினை உருவாகியிருக்கின்றது போல் தெரிகின்றது.

ஆகையினால் அவர்கள் அதைத் தீர்த்துக்கொண்டு சரியான முடிவொன்றுக்கு வருவார்கள் என்று நம்புகின்றோம். ஏனென்றால் ஏறக்குறைய 23 வருடங்களாகத் தமிழரசுக் கட்சியின் சம்பந்தன் அண்ணரே கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்திருக்கின்றார்.

ஆகவே, அந்த நாடாளுமன்றக் குழுத் தலைவராக மற்றக் கட்சிகளில் ஒருவருக்குக் கொடுப்பதுதான் முறை என்று நினைக்கின்றோம். இதனடிப்படையில் அவர்கள் அதைச் செய்வார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

மேலும், கூட்டமைப்பில் தற்போதுள்ள மூன்று கட்சிகளில் இரண்டு கட்சிகள் செல்வம் அடைக்கலநாதன்தான் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட வேண்டும் எனச் சொல்லியுள்ளன. எனினும், அந்த நிலைப்பாட்டுக்கு மாறாக தமிழரசுக் கட்சி இருக்கின்றது. ஆனாலும், செல்வத்துக்குத்தான் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

தமிழரசுக் கட்சியில் 6 எம்.பிக்கள் இருக்கின்றனர். எங்களில் 4 எம்.பிக்கள் (ரெலோ, புளொட்) இருக்கின்றோம். அந்த 6 பேரில் ஒருவர், இருவர் என எங்களுடைய நிலைப்பாட்டுக்குச் சிலர் இணங்கிச் சம்மதித்தாலும் இப்போது தமது கட்சியின் தீர்மானத்தை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அடுத்த கூட்டத்தில் என்ன நடக்கின்றது எனப் பார்ப்போம்.” – என்றார்.

# இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு தலைமறைவாகிய இரு சந்தேகநபர்கள் டுபாயில் கைது

## நேற்றுக் காலை நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்



திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் இருவர் டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

டுபாய்க்கு சென்ற குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், 2 குற்றவாளிகளையும் நேற்றுக் காலை நாட்டிற்கு அழைத்து வந்தனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

கங்கானம்கே திமுத்து சதுரங்க பெரேரா மற்றும் களுந்துர தினேஷ் ஷியமந்த டி சில்வா ஆகிய 2 குற்றவாளிகளே டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

திமுத் சதுரங்க பெரேரா மட்டக்குளி பகுதியில் வைத்து ஒருவரைச் சுட்டுக் கொன்றார் என கொழும்புக் குற்றப்பிரிவினால் அவருக்கு எதிராக ஆள்கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தினேஸ் ஷியமந்த மீது கொ/ஹவல பகுதியில் ஒருவரைக் கொலை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை, துப்பாக்கிச் சூடு நடத்திய ஆயுததாரியின் மோட்டார் சைக்கிளை செலுத்தியமை மற்றும் ஹெரோயின் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமையுடன் அந்த வழக்கு ஹோமாகம மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளது.

இருவரையும் கைது செய்ய சர்வதேச பொலிஸாரால் அண்மையில் சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பகிஷ்கரிப்பை கைவிட்டாலும் சில ரயில் சேவைகள் தாமதம்

## ரயில்வே திணைக்களம் தகவல்

ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்ட போதிலும் நேற்று காலை 14 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை வேளையிலும் சில ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என்.ஜே இதிபொலகே கூறியுள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்ட நிலையில் ஊழியர்கள் பணிக்கு திரும்பி வருகின்றனர் என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார்.

ருஹுணு குமாரி மற்றும் காலி குமாரி ஆகிய ரயில் சேவைகளும் இன்று மாலை இரத்து செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட தூர ரயில்கள் உள்ளிட்ட சுமார் 50 ரயில்கள் நேற்று காலை சேவையில் ஈடுபட்டன என எம்.ஜே இதிபொலகே தெரிவித்துள்ளார்.

# ஒன்லைன் பண மோசடியில் ஈடுபட்ட இரண்டு பேர் கைது



ஒன்லைன் ஊடாக பண மோசடியில் ஈடுபட்ட 2 சந்தேகநபர்களை கொம்பனித்தெரு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்பொருள் அங்காடியொன்றில் பணப்பரிசு வெற்றிகொண்டுள்ளதாக தெரிவித்து சந்தேபர்கள் 180,000 ஆயிரம் ரூபா பண மோசடி செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 07 கையடக்க தொலைபேசிகளும் அவற்றுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 109 சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொல்கஹவெல மற்றும் கேகாலை பகுதிகளைச் சேர்ந்த 23, 30 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதித்துறையைச் சுரண்டுவது

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை இடைநிறுத்துமாறு உத்தரவிடக்கோரி மீண்டும் ஓர் அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த வாரத்தில் இத்தகைய மனு ஒன்றைப் பரிசீலனைக்கு எடுத்த அன்றே தூக்கிக் கடாசியது ஐந்து உயர்நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்ட ஆயம். அது, விடயமே இல்லாத அற்பத்தனமான மனு என்று குறிப்பிட்டு, அதனை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்தமையோடு, இந்த மனுவைத் தாக்கல் செய்தவருக்கு வழக்கு செலவாக அரசுக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்தும படியும் பணித்திருந்தது.

இந்த வழக்கு செலவுக் கட்டளை என்பது ஓர் அடையாளக் குறியீடு. அத்தகைய மனு எவ்விதமான விரயத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற உயர்நீதிமன்றத்தின் சீற்றத்தின் ஒரு பிரதிபலிப்புதான் அந்த உத்தரவு. அதன் தாற்பரியம் புரியாமல் அதேபோல இப்போது இன்னொரு சட்டத்தரணி அதை ஒத்த ஒரு மனுவுடன் திரும்பவும் உயர் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார். இதற்கான வழக்குச் செலவுத் தொகைக் கட்டணம் பத்து மடங்காக நிர்ணயமாகும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சட்டத்தரணி அருண லக்சிறி என்பவர் உயர் நீதிமன்றில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த திங்களன்று உயர்நீதிமன்றத்தினால்நிராகரிக்கப்பட்டஅடிப்படைஉரிமை மனுவில்குறிப்பிட்டமைபோலஇதிலும்அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் இன்னும் முறையாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத நிலையில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு உத்தரவிடவும் இந்த மனுவில் அவர் கோரியுள்ளார்.

ஆயினும், 19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் செய்யப்பட்டுள்ள மாற்றம் குறித்து உயர் நீதிமன்றம் தனது நிலைப்பாட்டை ஒட்டி தெளிவான பொருள்கோடலை - அரசமைப்பு வியாக்கியானத்தை - ஒன்றுக்கு மூன்று தடவைகளுக்கு மேல் திரும்பத் திரும்பத் தெளிவாக வெளிப்படுத்தி உறுதிப்படுத்தி விட்டது.

அது புரியாதமை போல மீண்டும் மீண்டும் அதே விடயத்துக்காக உயர் நீதிமன்றத்தைச் சுரண்டிக் கொண்டிருப்பது இவ்விடயத்தில் சீற்றமான பிரதிபலிப்பை உயர் நீதிமன்றத்தைக் காட்டத் தூண்டும் என்றே தோன்றுகின்றது.

19 ஆவது அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டு ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த திருத்தத்துக்கு அமைவாக இரண்டு ஜனாதிபதி தேர்தல்கள் நடந்தும் முடிந்து விட்டன. மூன்றாவது தேர்தல் இப்போது நடக்கப் போகின்றது.

19ஆவது திருத்தம் வந்த போதும், பின்னர் தம்முடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்தானா அல்லது ஆறு ஆண்டுகளாக நீடிக்க முடியுமா என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் ஆலோசனை கோரிய போதும், பின்பு கடந்த திங்களன்று அடிப்படை உரிமை மனுவை ஐந்து நீதியரசர்கள் ஆயம் பரிசீலனைக்கு ஏற்காமல் நிராகரித்த போதும், இவ்விடயத்தில் தனது தெளிவான முடிவை உயர்நீதிமன்றம் வெளிப்படுத்தி விட்டது என்பது தான் உண்மை.

ஜனாதிபதியின் பதவி காலத்தை அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் தெளிவாக வரையறை செய்து நிற்பதாகவே உயர் நீதிமன்றத்தின் கருத்து வெளிப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் பொருள்கோடலின் படி அது ஐந்து வருடங்கள்தான். அதில் எந்தச் சந்தேகமும் குழப்பமும், மாறுபாடும் இருப்பதாக உயர் நீதிமன்றம் கருதவில்லை.

உயர் நீதிமன்றத்தின் ஒன்றுக்கு மூன்று உத்தரவுகளில் - வெவ்வேறு காலங்களில் வழங்கப்பட்ட வித்தியாசமான ஆயங்களின்முடிவுகளில்-அந்தஒருசீர்த்தன்மை தெளிவாக இருக்கும் போது, இவ்விடயத்தில் மீண்டும் மீண்டும் அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்து, உயர் நீதிமன்றத்தை சுரண்டிப் பார்ப்பது நீதிமன்றத்தைக் குழப்பும் எத்தனமாக மட்டுமின்றி, நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயக கட்டமைப்பு முறைமையையே சீரழிக்கும் எத்தனமாகவும் உயர்நீதிமன்றத்தால் கவனிக்கப்படக்கூடிய ஆபத்து ஏதுநிலைகள் உள்ளன.




# ஆம்ஸ்ட்ராங் கொலையில் பா.ஜ.க. சி.பி.ஐ. விசாரணை கோருவது ஏன்?

## திருமாவளவன் சந்தேகம்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்த வி.சி.க. தலைவர் திருமாவளவன், ஆம்ஸ்ட்ராங் கொலையில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.

அத்துடன் இந்தக் கொலையில் பா.ஜ.க. வலிந்து தலையிட்டு சி.பி.ஐ. விசாரணை கோருவது ஏன்? என கேள்வி எழுப்பினார்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்வர் ஸ்டாலினை சந்தித்த திருமாவளவன், அதன் பிறகு முதல்வரிடம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் நிலவும் சட்டம் – ஒழுங்கு நிலை குறித்து சில கருத்துகளை பகிர்ந்து கொண்டோம். பகுஜன் சமாஜ் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலையில் கைது செய்யப்பட்டவர்கள் மட்டுமின்றி, திட்டமிட்டவர்கள் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்ய வலியுறுத்தியுள்ளோம்.

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கை சீர்குலைத்து பதற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என சில அரசியல் கட்சிகள், சில அமைப்புகள் திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, பா.ஜ.கவுக்கு இந்த செயல்திட்டம் இருப்பதை அறிய முடிகிறது.

ஆம்ஸ்ட்ராங் படுகொலையில் கூட அரசியல் செயல் திட்டம் இருப்பதாக வி.சி.க. சந்தேகிக்கிறது. அவர் உயிரிழந்த சில நிமிடங்களில் பா.ஜ.கவைச் சேர்ந்த ஒருவர் தான் ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார். அவர் வைத்த கோரிக்கை தான் சி.பி.ஐ. விசாரணை. பொலிஸ் நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னதாகவே, பகுஜன் சமாஜ் கோரிக்கை வைக்கும் முன்னதாகவே தமிழக அரசு விசாரிக்கக்கூடாது, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிபிஐ விசாரிக்க வேண்டும் என்பது பா.ஜ.கவின் குரலாக இருந்தது. அதுவே பா.ஜ.க. மாநிலத் தலைவரின் குரலாகவும் அடுத்து ஒலித்தது.

ஆருத்ரா கோல்டு நிறுவனத்துடன் பா.ஜ.கவை சேர்ந்த சிலருக்கு உள்ள தொடர்பு குறித்து கடந்த சில மாதங்களாக விவாதிக்கப்படுவதை பார்க்கிறோம். ஆருத்ரா கோல்டு விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பா.ஜ.கவில் பொறுப்பிலேயே இருக்கிறார்கள். ஆம்ஸ்ட்ராங் கொலையில் ஆருத்ரா கோல்டு விவகாரமும் பேசப்படுகிறது. ஆம்ஸ்ட்ராங் கொலையில் பா.ஜ.க. வலிந்து தலையிட்டு சி.பி.ஐ. விசாரணை கோருகிறது. அவர்களின் அரசியல் செயல்திட்டம் என்பது திமுக அரசுக்கு எதிராக இங்கு பதற்றத்தை ஏற்படுத்த வேண்டும், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி சட்டம் – ஒழுங்கை சீர்குலைக்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது.

அதற்குத் துணையாக பல அமைப்புகள் இங்கு செயல்பட்டு வருவதை காண முடிகிறது. இது தொடர்பாக காவல் ஆணையரைச் சந்தித்து நேர்மையான முறையில் விசாரணை நடத்த வலியுறுத்தினோம். முன்னாள் முதல்வர் கருணாநிதியை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது அரசியல் அநாகரிகத்தின் உச்சமாக இருக்கிறது. தனிப்பட்ட அல்லது அரசியல் விமர்சனங்களை நாகரிகமாக வைக்கலாம். ஆனால் அவரை கொச்சைப்படுத்துவதன் மூலம் மேலும் பதற்றத்தை உருவாக்குவதே அவர்கள் நோக்கம் என்பதை உணர முடிகிறது.

எனவே, ஒட்டுமொத்தமாக அரசியல் திட்டங்களை வரையறுத்து கொண்டு சட்டம் – ஒழுங்கை சீர்குலைக்க சில சக்திகள் செயல்பட்டு வருவதை அறிந்து, சட்டம் – ஒழுங்கை காக்க அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியிருக்கிறோம். சட்டம் – ஒழுங்கை சீர்குலைப்போருக்கு அடைக்கலம் தருவோரை கண்காணித்து, அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனு அளித்துள்ளோம்.” – என்றார்

# நரேந்திர மோடியின் ஆட்சியில் 3.84 லட்சம் பேர் வேலை இழப்பு!

இந்தியாவின் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளில் பிரதமர் மோடி கவனம் செலுத்த வேண்டும் என காங்கிரஸின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே மல்லிகார்ஜுன கார்கே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நரேந்திர மோடியின் அரசானது வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம், சமத்துவமின்மை போன்றவற்றால் கோடிக்கணக்கான மக்களை குழிக்குள் தள்ளியுள்ளது எனவும், 20 முதல் 24 வயதுடையவர்களின் வேலையின்மை விகிதம் 40 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுத்துறை நிறுவனங்களின் பெரும்பாலான அரசு பங்குகள் விற்கப்பட்டுள்ளன எனவும் இதனால் 7 பொதுத்துறை நிறுவனங்களில் இருந்து மட்டும் 3.84 லட்சம் பேர் அரசு வேலைகளை இழந்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# படகு கவிழ்ந்ததில் நான்கு அகதிகள் பலி





ஆங்கில கால்வாயைக் கடக்கும் முயற்சியின்போது படகு கவிழ்ந்ததில் நான்கு அகதிகள் உயிரிழந்துள்ளனர் என பிரான்ஸ் கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

வடக்கு பிரான்ஸ் கரையோரப் பகுதியில் நள்ளிரவில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

மயக்கமடைந்த நிலையில் இருந்த நான்கு பேரைக் காப்பாற்ற முடியாமல் போனதாகக் கடலோரக் காவல்படையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் 63 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்பு நடவடிக்கைகளில் உலங்கு வானூர்தி ஒன்றும் மீன்பிடி படகுகளும், உதவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அனர்த்தம் உண்மையிலேயே பாரதூரமான சம்பவம் எனப் பிரித்தானிய உட்துறை செயலாளர் வெற்றே கூப்பர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதியில் மாத்திரம் 13,000 அகதிகள் சட்டவிரோதமாக ஆங்கிலக் கால்வாயை கடந்துள்ளனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பிரித்தானியாவில் புதிதாகத் தெரிவாகியுள்ள தொழில் கட்சி அரசாங்கம் ஆட்கடத்தற்காரர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய நடைமுறைகளை அமுல்படுத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கருணைக்கொலை இயந்திரத்திற்கு தடை விதித்தது சுவிட்சர்லாந்து

நொடிகளில் உயிரிழக்கச்செய்யும் கருணைக்கொலை இயந்திரத்தை சுவிட்சர்லாந்து அரசு தடை விதித்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் உள்ள பிரபல நிறுவனம்,கருணைக் கொலையை கோருவோருக்காக சர்கோபகஸ் என்ற இயந்திரத்தை தயாரித்துள்ளது.

இந்த இயந்திரத்தை டொக்டர். பிலிப் நிட்ச்கே என்பவர் உருவாக்கியுள்ளார்.

மேலும், இந்த இயந்திரம் விரைவில் கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த இயந்திரம், தீங்கு விளைவிக்கும் என்ற காரணத்தால் சுவிட்சர்லாந்து அரசாங்கம் தடை விதித்துள்ளது.

தாங்க முடியாத மருத்துவப் பிரச்சனையால் அவதிப்படுபவர் எளிதில் மரணம் அடைய இந்த இயந்திரம், பயனுள்ளதாக இருக்கும் என தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கருணைக்கொலை செய்துகொள்ள விரும்புபவர்கள் இந்த இயந்திரத்தில் அமரும் போது, "நீங்கள் யார்?, எங்கே இருக்கிறீர்கள்?, இந்த பொத்தானை அழுத்தினால் என்ன நடக்கும் தெரியுமா? என மூன்று கேள்விகளை இயந்திரம் கேட்கும்.



இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்தால், இயந்திரம் அதன் வேலையைத் தொடங்கும் என தயாரிப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பொத்தானை அழுத்திய 30 வினாடிகளில் ஒக்சிஜன் சதவீதம் 21ல் இருந்து 1 சதவீதம் வரை குறைந்து நொடிகளில் அந்த நபர் உயிரிழந்து விட்டார். எனினும்,கடுமையான விமர்சனங்கள் காரணமாக இந்த இயந்திரத்தை தடை செய்ய சுவிட்சர்லாந்து அரசு முடிவு எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

# பிரான்சில் புதிய கூட்டணி அமைக்க அழைப்பு விடுத்துள்ளார் மேக்ரான்



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் பெரிய கூட்டணி ஒன்றை அமைக்க அழைப்பு விடுத்துள்ள விடயம், அதிக வாக்குகள் பெற்ற இடதுசாரிக் கட்சியினருக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இவர் பிரான்ஸ் மக்களுக்கு எழுதி வெளியிட்டுள்ள கடிதம் ஒன்றில், தங்களை குடியரசுவாதக் கட்சிகள் என கருதும் கட்சிகள் அனைத்தும் இணைந்து, புதிய, பெரிய கூட்டணி ஒன்றை அமைக்க முன்வரவேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்படி தீவிரக் கொள்கை கொண்ட வலதுசாரிக் கட்சியை மட்டுமல்ல, தற்போதைய தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று முதலிடம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளையும் ஒதுக்க வேண்டும் என்பது அதன் பொருள் என தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, இடதுசாரிக் கட்சியினருக்கு மேக்ரானுடைய கடிதம் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, மேக்ரான் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கவேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

அத்துடன், அதிக ஆசனங்கள் பெற்ற கட்சியை ஆட்சி அமைக்க மேக்ரான் அனுமதிப்பதே இப்போதைய சூழலில் அவர் நாட்டுக்குச் செய்யும் சிறந்த விடயமாக இருக்கும் என இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினரொருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரான்சில் நடந்துமுடிந்த இரண்டாவது சுற்று தேர்தலில், எந்தக் கட்சிக்கும் தனி பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆகவே, கூட்டணி அமைத்துத்தான் கட்சிகள் ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலாத் தளமாக மாற்றுவற்கு முயற்சி

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

நாட்டுக்கு வருமானத்தை பெற்றுத் தரும் ஒரு துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

இத் துறையை வலுப்படுத்தி மாவட்டத்திற்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக மாவட்டத்தில் உள்ள ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கான கலந்துரையாடல் துறைசார் நிபுணர்களுடன் நடைபெற்றது.

மாவட்டத்தின் புராதன இடமாக ஒல்லாந்தர் கோட்டை காணப்படுவதனால் இக்கோட்டையை நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாகவும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், இவ் வளாகத்தில் புராதன நூதனசாலை ஒன்றை அமைத்தல் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் மட்டக்களப்பு பிரதேசத்திற்கு உரித்தான உணவுகளைச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கல், பாரம்பரிய கலை கலாசார விடயங்களைச் சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கும் விதமான செயற்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும் துறைசார் நிபுணர்கள் நிகழ்நிலையூடாக கலந்து கொண்டு தமது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், அரச உயர் அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள்,அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.











# ஜனாதிபதித் தேர்தலை தடுக்கும் வகையில் மற்றொரு அடிப்படை உரிமை மனு தாக்கல்

19 ஆவது அரசமைப்பு திருத்தம் உரிய வகையில் நிறைவேற்றப்படாததால் அதனை பொதுமக்கள் கருத்து கணிப்புக்குட்படுத்தி நிறைவேற்றும் வரை, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்பிற்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம், சட்ட மாஅதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

19 ஆவது திருத்தத்தின் ஊடாக அரசமைப்பின் 70 ஆவது சரத்து திருத்தப்பட்டு தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்றத்தை ஒரு வருடத்தின் பின்னர் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி இழந்துள்ளார் என மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆவது திருத்தம் பொதுமக்கள் கருத்து கணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தீர்ப்பு வழங்கிய போதிலும் இதுவரை மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் அது அங்கீகரிக்கப்படவில்லை என மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு உட்பட்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வருவதுடன் 19 ஆவது திருத்தத்தை மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் நிறைவேற்றாமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணான செயலாகும் எனவும் மனுதாரர் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, நாட்டின் அரசமைப்பை மீறி 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் அங்கீகரிக்காமல் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாகக் கருதி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் ஊடாக பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தும்படி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் தமது மனுவினூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

# வேதன அதிகரிப்புக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## ஜோசப் ஸ்டாலின் கூறுகின்றார்




ஜூலை 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் பணிக்குச் சமுகமளித்த அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளார்.

முழு அரச சேவையினரின் வேதனக் கோரிக்கையை ஏற்காமல், பணிக்குச் சமுகமளித்த ஒரு சிலருக்கு மட்டுமே சம்பள உயர்வை வழங்குவதற்கான தீர்மானத்தைத் தடுக்க சட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சிலருக்கே சம்பள உயர்வை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமைக்கு எதிராகத் தமது தொழிற்சங்கம் எதிர்ப்பை வெளியிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கெஹெலியவிற்குத் தொடர்ந்து 25 வரை விளக்கமறியல் நீடிப்பு

தரமற்ற இம்யூனோகுளோப்ளின் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட சந்தேக நபர்களை மீளவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 7 சந்தேகநபர்களும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.





# கொடிகாமம் வீட்டிலிருந்து 87 கிலோ கஞ்சா சிக்கியது

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் உள்ள வீடொன்றில் சாவகச்சேரி பொலிஸாரால் நடத்தப்பட்ட சோதனையில் 87 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு ஏழு நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையுடன் காரொன்றும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் வழிகாட்டலில் சாவகச்சேரி பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய சங்குப்பிட்டி பாலத்தில் பொலிஸார் நடத்திய சோதனையின்போது காருக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த 47 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொடிகாமத்தில் வசிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவரே தனக்கு கஞ்சா விநியோகம் செய்தார் என சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கொடிகாமத்தில் உள்ள வீடொன்று நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டபோது அங்கிருந்து 87.67 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அங்கிருந்து சந்தேக நபர் தப்பியோடிய நிலையில் வீட்டில் இருந்த சந்தேக நபரின் தாயார் கைதுசெய்யப்பட்டார்.

கைதான இருவரும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டநிலையில் இருவரையும் ஏழு நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

தப்பியோடிய சந்தேகநபரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.









# மட்டு. களுதாவளை பிள்ளையார் ஆலய தீர்த்தம்

(பழுவூரான்)

இலங்கையின் மிகவும் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய ஆனி உத்தரத் தீர்த்தோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

முதலில் மூலமூர்த்தியாகிய சுயம்புலிங்கப் பிள்ளையாருக்குப் பூஜைகள் நடைபெற்றமையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வந்து,ஆலய முன்றலில் அமைந்துள்ள தீர்த்தக்கேணியில் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் புடைசூழ, வேத பாராயணங்கள் ஒலிக்க, பக்தர்களின் அரோகரா கோசங்களுக்கு மத்தியில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

இதன்போது இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த அடியவர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றினர்.

இவ்வாலய உற்சவம் கடந்த 3 ஆம் திகதி பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.





















# அமைச்சர் பந்துல திருமலையில்!

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான மக்கள் சந்திப்பு வேலைத்திட்டத்தின் கீழ், நேற்று திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டமொன்று இடம்பெற்றது. இதில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அமைச்சர் இலங்கைப் போக்குவரத்து சபையின் திருகோணமலை சாலைக்கு சென்று அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டமையுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதில் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள, அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.












# இராணுவத்தினருக்கு வசிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அரச காணிகளுக்கு உறுதிப் பத்திரம் வழங்கும் திட்டம்

முப்படையினர், இலங்கைப் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையில் ஊனமுற்ற வீரர்களுக்கும், உயிர்த் தியாகம் செய்தவர்களின் குடும்பத்தாருக்கும் வசிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அரச காணிகளை நிபந்தனையின்றியும் கட்டணங்கள் இல்லாமலும் முழுமையான உரிமையை வழங்குவதற்கான வேலைத்திட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் அச்சமின்றி மக்கள் நடமாடுவதற்காக உயிர் தியாகம் செய்த பாதுகாப்புத் தரப்பினருக்கு தாய்நாட்டில் காணித் துண்டு ஒன்றின் உரிமையை உறுதிப்படுத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். ஜனாதிபதி செயலகத்தின் தலைமையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, பொலன்னறுவை மாவட்ட நடமாடும் நிகழ்ச்சி 10-07-2024அன்றுஹிங்குராக்கொடைவிமானப்படைத்தலைமையகத்தில் நடைபெற்றது. 17-07-2024 ஆம் திகதி, சாலியபுர கஜபா படைப்பிரிவு நிலையத்திலும், 19-07-2024 ஆம் திகதி குருநாகல் விஜயபா படைப்பிரிவு நிலையத்திலும், 23-07-2024 ஆம் திகதி களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலும் இந்த நடமாடும் சேவைகள் நடைபெறவுள்ளன.

# நாட்டின் புதிய சட்டமா அதிபராக பாரிந்த ரணசிங்க பதவியேற்றார்



புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி கே. ஏ. பாரிந்த ரணசிங்க ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று பிற்பகல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அரசமைப்பின் 61 ஈ (ஆ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே. ஏ. பாரிந்த ரணசிங்க இலங்கையின் 49 ஆவது சட்டமா அதிபர் ஆவார்.

இந்த பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.





# எமது ஆட்சியில் சிறுவர் உரிமைகளுக்கான தேசிய கொள்கை ஒன்று உருவாக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

“ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் சிறுவர் உரிமைகளுக்கான தேசியக் கொள்கையொன்றையும் அதனை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி செயலணியொன்றையும் ஸ்தாபிக்கவுள்ளோம்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 308 ஆவது கட்டமாக 12 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன மத்திய கொழும்பு, மகா போதி வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சிறுவர்களின் உரிமைகளுக்கான தேசிய கொள்கையை உருவாக்குவோம். சிறுவர் உரிமைகள் குறித்து அவ்வப்போது பேசப்பட்டாலும் முறையான வேலைத்திட்டமொன்று எமது நாட்டில் முன்னெடுக்கப்படவில்லை.

சிறுவர்களின் ஊட்டச்சத்து, கல்வி, பாதுகாப்பு மற்றும் சமூகக் கொள்கைகள்மூலம் உருவாக்கப்படும் பிரச்சினைகளுக்கு விரைவான பதில்களை வழங்குவதில் கவனம் செலுத்தும் வகையில், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றினை ஸ்தாபிப்போம்.

இதன் ஊடாக நாடு முழுவதும் சிறுவர் உரிமைகளை வலுப்படுத்திப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். – என்றார்.














# வட்டகொடை தொழிலாளர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

அதிகரிக்கப்பட்டுள்ள 1,700 ரூபா நாளாந்த சம்பளத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடியாக வழங்க தோட்டக் கம்பனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வட்டகொடை தோட்ட தொழிலாளர்கள் நேற்று வெள்ளிக் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வட்டகொடை தோட்டத்தைச் சேர்ந்த வட்டகொடை மேற் பிரிவு, வட்டகொடை கீழ்பிரிவு மற்றும் யொக்ஸ்போட் ஆகிய தோட்ட பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் அத்தோட்ட தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் நேற்று இந்த கவனவீர்ப்புஒ போராட்டத்தை முன்னெடுத் தனர்.











# தற்போதைய கல்வி மறுசீரமைப்பு செயல்முறை மூலம் கல்வித்துறையில் பெருவளர்ச்சியை ஏற்படுத்துவோம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார் தெரிவிப்பு



“தற்போதைய கல்வி மறுசீரமைப்பின் ஊடாக, இந்த நாட்டில் கல்வித் துறையில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இந்த நாட்டின் வருங்கால சந்ததியை உருவாக்கும் கௌரவமான சேவையாக ஆசிரியர்களுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால், ஆசிரியர்கள் அனைவரும் அதனைச் சரியாக புரிந்துகொண்டு மனசாட்சிப்படி செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தற்போதைய கல்வி மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக இந்நாட்டின் கல்வித் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என நாம் நம்புகின்றோம். குறிப்பாக தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு, ஐநூறுக்கும் மேற்பட்ட கொரிய, ஜெர்மன், பிரெஞ்சு, ஹிந்தி, சீன மற்றும் ஜப்பானிய மொழி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த நாட்டில் உள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்ற எதிர்பார்க்கின்றோம். அந்தப் பல்கலைக்கழகங்களில் இருந்து 04 வருடங்களின் பின்னர் பட்டதாரி ஆசிரியர்கள் உருவாகுவார்கள். இதன் மூலம் தற்போது கல்வியியல் கல்லூரிகளில் இணையும் 5,000 மாணவர்களின் எண்ணிக்கையை 7,500 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் 7,500 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ச்சி பெறுவார்கள். மேலும், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காகப் பாடசாலைகளில் உள்ள வசதிகளை மேலும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவர்களுக்கு பயிற்றுவிக்க, பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை 120 ஆக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், இதுவரை வழங்கப்படாத ஆசிரியர் நியமனங்கள், மூன்றாம் தர அதிபர் நியமனங்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் நியமனங்கள் என்பனவும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம், கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளில் பணம் அறவிடுவது சட்ட விரோதமானது எனவும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு பணம் அறவிடுவதைத் தடுக்க பெற்றோரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஆசிரியர் சேவை என்பது இந்நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்கும் துறையாகும். மற்றவர்களை விட அவர்களுக்கு அதிக பொறுப்பு உள்ளது. எனவே, தங்கள் மனசாட்சிப்படி செயல்பட வேண்டும். ஆனால், இந்தப் பணிப்பகிஷ்கரிப்புகள் தொடர்ந்தால் தொழிற்சங்கங்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என்பதை அவர்கள் தற்போது உணர்ந்துள்ளனர். அவர்கள் வெவ்வேறு கதைகளைக் கூறினாலும், அவர்கள் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் தற்போது தோல்வியடைந்துள்ளன.

மேலும், மலையகத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாகவும் தற்போது பிரச்சினை எழுந்துள்ளது. நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றம் சென்றுள்ளது. இதற்கு முன்னர் சம்பளம் அதிகரிக்கப்பட்ட போதும் இதேபோல் அவர்கள் நீதிமன்றத்துக்குச் சென்றாலும் கூட அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதே போன்று இம்முறையும் அவ்வாறே இந்த சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்ப்பை வழங்கும் என்பதில் தொழிற்சங்கங்களாகிய எமக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர், அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. தனியார் துறையினரின் சம்பளமும் அதிகரித்துள்ளது. உலகில் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அங்கும் மக்களின் வாழ்க்கைச் செலவு தற்போது அதிகரித்துள்ளது. குறிப்பாக கொரோனா தொற்றுக்குப் பின்னர் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலைமை தோன்றியுள்ளது. எமது நாடும் அதற்கு முகம்கொடுத்தது.

ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை, தற்போது மாறியுள்ளது. பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதன் காரணமாக, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று வலுவடைந்துள்ளது.

மக்கள் சரியாக சிந்திந்து தமது முடிவுகளை எடுப்பார்களாயின், நாட்டை அதளபாதாளத்தில் இருந்து மீட்டெடுத்து நாட்டைக் காப்பாற்றிய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அதுதான் சரியான முடிவாகவும், மக்களுக்கான தீர்வாகவும் இருக்க முடியும்.” – என்றார்.

# ஒன்றிணைக்கப்படும் அரச உர நிறுவனங்கள்

அரச உர நிறுவனங்கள் இரண்டு நேற்று முதல் அமுலாகும் வகையில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கொமர்ஷல் மற்றும் லங்கா உர நிறுவனங்கள் அரச உர நிறுவனம் என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

அமைச்சு ஒன்றின் கீழ் ஒரு விடயதானத்துக்குள் இரண்டு நிறுவனங்கள் செயற்படுவதால் ஏற்படும் செலவுகளைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டதால், அங்குக் கடமையாற்றிய 400 பேரில் 273 பேர் சுயவிருப்பத்திற்கு அமைய ஓய்வு பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் 2, 3 ஆம் கட்ட அபிவிருத்தி பணி ஆரம்பம்

"ஏற்றுமதி பொருளாதாரம், உற்பத்தி, சுற்றுலா, தொழில்நுட்பத் துறை, நவீன விவசாய முறை ஆகியவற்றின் ஊடாக நாட்டுக்குள் வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைக்க முடியும். அதற்கு அவசியமான அடித்தளத்தை அரசாங்கம் இட்டுள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி வலயமாக 1000 ஏக்கர் பரப்பளவில் பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் இரண்டாம், மூன்றாம் கட்ட அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் வகையில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிங்கிரிய ஏற்றமதி வலயம் முழுமைபடுத்தப்பட்டதன் பின்னர் 2600 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டிக் கொள்ள எதிர்பார்ப்பதோடு, 75,000 புதிய வேலைவாய்ப்புக்களும் உருவாக்கப்படவுள்ளன.

இதன்போது பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் நிர்மாண பணிகளை முன்னெடுக்கும் Dongxia Industrial & Commerce Co.Ltd. நிறுவனத்தின் அலுவலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, நிறுவன வளாகத்தை மேற்பார்வை செய்தமையோடு, ஊழியர்களுடனும் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலீட்டுச் சபையின் அதிகாரிகள், நகர அபிவிருத்தி சபையின் அதிகாரிகள், முதலீட்டாளர்கள், தொழில் உரிமையாளர்களுக்கு இடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றது. இந்தச் செயலாக்க வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதன் பின்னர் பிங்கிரிய, தும்முல்லசூரிய, மாதம்பை உள்ளிட்ட பிரதேசங்களை மாநகர தரத்திற்கு மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுரை விடுத்தார்.

விவசாயம், உற்பத்தித் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, மீன்பிடி உள்ளிட்ட ஐந்து துறைகளின் கீழ் பிங்கிரியவை பொருளாதார வலயமாக மாற்றுவது குறித்தும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் –

"டொங்ஷியா நிறுவனம் 2018 இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. வங்குரோத்து அடைந்த பின்னரும் நாட்டிலிருந்து புதிய தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. அதனால் 400 பேருக்கு வேலைவாய்பை வழங்க முடிந்துள்ளது. இந்த தொழிற்சாலை இளையோருக்கு சிறந்த எதிர்காலத்தை தோற்றுவிக்கும். நாட்டில் இதுபோன்ற பல தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்.

பிங்கிரிய பிரதேசத்தை முதலீட்டு வலயமாக அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அதற்காகவே 2018 ஆம் ஆண்டில் பிங்கிரிய பொருளாதார வலயத்தை ஆரம்பித்தோம். இன்று மேலும் 1,000 ஏக்கர்களை இந்த வலயத்தோடு இணைத்திருக்கிறோம்.

நாம் மிகக் கஷ்டமான காலத்தை கடந்து வந்திருக்கிறோம்.நாட்டின்பொருளாதாரம்சரிவடைந்தவேளையில்நாட்டை ஏற்றுக்கொள்ள எவரும் வரவில்லை. நாடாளுமன்றத்தில்

தொடர்ச்சி▼



















# பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் 2, 3 ஆம் கட்ட அபிவிருத்தி பணி ஆரம்பம்

தொடர்ச்சி▲

ஒரு ஆசனத்தை கொண்டிருந்த கட்சிக்கு ஜனாதிபதி பதவியை வழங்க வேண்டிய நிலைமை வந்தது. உலகில் எங்கும் அவ்வாறு நடந்ததில்லை. இன்றளவில் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வந்திருக்கிறது.

கடன் மறுசீரமைப்பினால் மீளச் செலுத்த வேண்டியிருந்த கடன் தொகையில் 8 பில்லியன் டொலர் நிவாரணம் கிடைத்திருக்கிறது. கடன் செலுத்துவதற்கான காலத்தையும் 2043 வரையில் நீடித்துள்ளோம். அதனால் நாட்டின் பொருளாதாரம் மூச்சு விடும் நிலைமையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சரிவடையலாம். எமது ஏற்றுமதி வருமானத்தைவிட இறக்குமதி செலவு அதிகமாக உள்ளது. இவ்வாறு முன்னோக்கிச் சென்றால் இன்னும் பதினைந்து வருடங்களில் மீண்டும் வங்குரோத்து நிலை வரும்.

அதனால், வெளிநாட்டு கடன்களை முகாமைத்துவம் செய்து சிறந்த பொருளாதார முறைமையை பேண வேண்டும். வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் ஏற்றுமதி பொருளாதாரத்தினால் முன்னேறியுள்ளன. இலங்கை இன்னும் ஒரே இடத்தில் நிற்கிறது.

அதனால், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாதுகாத்துகொண்டு நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று திறக்கப்பட்ட பொருளாதார வலயம் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

ஏற்றுமதி பொருளாதாரம், உற்பத்தித் துறைகள், சுற்றுலா, தொழில்நுட்பம், நவீன விவசாயம் உள்ளிட்ட துறைகளின் ஊடாக வலுவான பொருளாதாரத்தை ஏற்படுத்த முடியும். அதற்குத் தேவையான அடித்தளத்தை அரசாங்கம் இட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்களைப் பாதுகாப்பதால் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

ஏற்றுமதி துறையை ஊக்குவிப்பதற்கான 2018 ஆம் ஆண்டில் பிங்கிரிய ஏற்றுமதி வலயம் உருவாக்கப்பட்டது. அதனால் குளியாபிட்டிய, தும்முல்லசூரிய, மாதம்பை, பிங்கிரிய, சிலாபம் உள்ளிட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும். இந்த பொருளாதார வலயத்தை முழுமைப்படுத்தும் பட்சத்தில் 75,000 தொழில் வாய்ப்புக்களும் உருவாகும்.

அதேபோல் இரணவில, பிங்கிரிய, சிலாபம் வரையில் சுற்றுலா வலயமொன்றும் அமைக்கப்படவுள்ளது. இரணவில பிரதேசத்தில் கோல்ப் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதேபோல், ஐ.ரி. வலயமொன்றைக் கட்டமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனங்களின் தோட்டங்களை நவீன விவசாயத்துக்காக பயன்படுத்திகொள்ள எதிர்பார்க்கிறோம்.

இந்த ஏற்றுமதி வலயம் மேம்படுத்தப்பட்ட பின்னர் புதிய வீடுகள், நகரங்கள் மற்றும் பிரதேச மக்களுக்கான வியாபார வாய்ப்புக்களும் உருவாகும்.

அதன்படி, விவசாயம், தொழில்துறை, உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா வர்த்தகம், மீன்பிடித்துறை ஆகியவற்றை மேம்படுத்துவதன் ஊடாக பிங்கிரியவை இந்நாட்டின் பிரதான பொருளாதார வலயமாக மாற்றியமைக்க எதிர்பார்ப்பதோடு, இதற்கு இணையாக பன்னல, குளியாபிட்டிய பகுதிகளிலும் பாரிய அபிவிருத்தி ஏற்படும்."– என்றார்.













# விக்கி கட்சியின் முதல் தேசியமாநாடு பிரதம விருந்தினர் சிறிதரன் எம்.பி.!





தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மகாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் இந்த மகாநாடு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சீ.வீ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மகாநாட்டில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொள்ள உள்ளார். இந் நிகழ்வில் சிறப்புரையை யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம் ஆற்றவுள்ளார்.

இதன் போது கலைநிகழ்வுகள் விசேட உரைகள் என்பன இடம்பெற்று மாநாட்டின் தீர்மானங்களும் அறிவிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சியில் மூதாட்டி ஒருவர் வழுக்கி வீழ்ந்து பரிதாப மரணம்



மலசலகூடத்துக்குச் சென்ற வேளை வழுக்கி வீழ்ந்த மூதாட்டி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, புலோலி தெற்கைச் சேர்ந்த இராசம்மா சின்னத்தம்பி (வயது 82) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தனது வீட்டில் உள்ள மலசலகூடத்துக்குச் சென்றவேளை வழுக்கி வீழ்ந்து அவர் மயக்கமடைந்தார். அதையடுத்து அவர் அங்கிருந்து மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் -13.7.2024




இன்று உங்களிடம் விரைந்து முடிவெடுக்கும் திறன் காணப்படும். உங்கள் செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் நன்மை அடைவீர்கள்.

உங்கள் தனித்த திறன் உங்கள் செயல்திறனில் வெளிப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் விருப்பமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிக்குமிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று பணிகள் சமூகமாக நடக்காது. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். தகுந்த பலன்கள் கிடைக்காது. என்றாலும் கட்டுப்பாட்டுடன் சுமூகமாகச் செயல்களை செய்ய வேண்டும் ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் சூழ்நிலை இருக்காது. சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

மன உளைச்சல் காரணமாக இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.




இன்று அதிகமான செயல்கள் காணப்படாது மனக் குழப்பத்தில் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும். அது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று பண வரவு காணப்படாது. முடிந்த அளவு சேமிக்க வேண்டும். என்றாலும் நீங்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரும்.

கண்களில் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் தேவை.




இன்று வளர்ச்சி காணப்படும். இன்று நீங்கள் உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமைகளை பயன்படுத்தி செயலாற்றுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்களின் இந்த நேரடி அணுகுமுறை காரணமாக நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள். புதிய முதலீட்டுக்கான முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.பிரார்தனை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும். கடினமான சூழ்நிலைகளை நம்பிக்கையுடன் சமாளிக்க வேண்டும். தன்னம்பிக்கையை பராமரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். பணிகளை செய்யும் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சண்டைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்கவேண்டும். நீங்கள் அமைதியாக இருப்பதன் மூலம் எதிர்மறை விளைவுகளை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். பணத்தை கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

இன்று சளி ஏற்பட வாய்ப்புள்ளது. இதமான வெந்நீரைப் பருகுங்கள். குளிர்ச்சியான உணவு வகைககளை தவிர்த்திடுங்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முன்னேற்றத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். இசை கேட்டல் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்று நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். கணிசமாக பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

சளி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்சிகரமான பலன்கள் கிடைக்காது. எனினும் எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதைக் காண்பீர்கள். இன்று பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். அது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்கள் கையிருப்பை கரைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று குறைந்த அனுகூலமான நாள். தலைவலி வர வாய்ப்புள்ளதால் அமைதியை கடைபிடிப்பது நல்லது.




இன்று நன்மை நடக்கும் நாள். உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். விளையாட்டுப் போக்கில் இன்று உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

பணிகள் அதிகமாக காணப்பட்டலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று உங்கள் பணிகளை நீங்கள் நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சியில் இருவரும் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் நேர்மறையான போக்கு காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.07.2024

## தனுசு

இன்று சிறப்பான நாள். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் நாள். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டராம் விரிவடையும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் செயல் திறன் கண்டு சக பணியாளர்கள் பொறாமைப்படுவார்கள் பணியில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். உங்கள் அன்பை புரிந்து கொண்டு அவரும் பதில் அன்பு செலுத்துவார்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கூடும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கவனமின்மை காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சக பணியாளர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள்.

தேவையற்ற மனக்குழப்பம் காரணமாக அற்ப விஷயங்களில் உங்கள் துணையிடம் குற்றம் கண்டு பிடிப்பீர்கள்.

பண வரவு சுமாராக இருக்கும். பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்களை உண்பதை தவிர்க்க வேண்டும்.

## கும்பம்

இன்று உற்சாகமும் ஆற்றலும் குறையும்படியான சூழ்நிலை உருவாகும். குறைந்த எதிர்பார்ப்புடன் உங்கள் செயல்களை ஆற்றினால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாகஇருக்காது. பணிகள் அதிகமாக காணப்படுவதால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் நட்புடன் அணுக வேண்டும். இதனால் நல்லுறவை பராமரிக்க முடியும்.

பயணத்தின்போது பணம் இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## மீனம்

இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க உகந்த நாள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி செய்வீர்கள். உங்கள் திறமை மற்றும் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல லாபமும் பண வரவும் காணப்படும்.

உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



